கண்டக்டர்களையும் ஒன்றாகக் கூட்டி இப்படியிப்படித்தான் நடக்க வேண்டு மென்று விதிமுறைகளை யெல்லாம் எடுத்துச் சொல்லுகின்ற அளவில் மாதந்தோறும் வகுப்புகள் நடத்தி அப்படிப்பட்ட குறைகளைத் தடுப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது பற்றி இப்போது டிரைவர் களுக்கும், கண்டக்டர்களுக்கும் எடுத்துச் சொல்லுகின்ற அளவிலே 1968-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1-ம் தேதி ஒரு அறிக்கை பொதுவாக அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையை நான் இங்கே படிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சுற்றறிக்கை எண். 20/68

பொருள் : விபத்துக்கள்—ஓட்டுநரின் கவனக் குறைவால் ஏற்படும் விபத்துக்களைத் தவிர்க்க—அறிவுரை.

தமிழக அரசு போக்குவரத்துத் துறையில் கடந்த ஆறு ஆண்டு களில் ஓட்டுநர்களின் கவனக் குறைவால் ஏற்பட்ட விபத்துக்களில் உயிர் இழந்தோர் எண்ணிக்கை கூடுதலாகிக் கொண்டே வருகிறது. ஓட்டுநர்கள் இதனை மனதில் கொண்டு பிற உயிர்களைத் தன் உயிர்போல் காத்து விபத்துக்களைத் தவிர்க்க வேண்டுமாய், மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்களால் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

2. ஓட்டுநர்களின் ஓட்டும் முறையில் அதிருப்தியோ அல்லது கவனக் குறைவோ காணப்பட்டால், அவர்களை வழித் தடங்களிலிருந்து திரும்பப் பெற்று மீண்டும் ஓட்டுநர் பயிற்சிக்கு அனுப்ப கூட்டு இயக்குநர் அதிகாரம் பெற்றவராயிருக்கிறார் என்பதை ஓட்டுநர்கள் மனதில் கொள்ளுமாறு கட்டளை பிறப்பிக்கப்படுகிறது.

என்ற முறையில் இந்த அறிக்கை விடப்பட்டிருக்கிறது.

திருமதி வி. பா. பழனியம்மாள்: பல்லடத்தில் இருந்து கோவைக்குச் செல்லும் பாதையில் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ் ஒரு காரின் மீது மோதி அந்தக் காரில் இருந்தவர்கள் அப்போதே இறந்துவிட்டார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படிப்பட்ட தகவல் வரவில்லை. தகவல் இருந்தால் அம்மையார் அவர்கள் அனுப்பலாம்.

திரு. ஏ, எம். ராஜா: டிரைவர்களை நியமிக்கும்போது அணைக்கட்டு களிலே 10, 15 ஆண்டுகள் வேலை செய்திருக்கிற டிரைவர்களை அரசாங்க பஸ்களை ஓட்டுவதற்கு நியமிக்கத் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தேசியமயமாக்கும் கொள் கையில் தனியார் துறையிலுள்ள தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள முயற்சி எடுத்துக் கொள்ளப்படுகின்றது. அணைக்கட்டிலே வேலை செய்கிறவர்களை எடுத்துக் கொள்வது என்பது பிறகு யோசிக்கப்படும்.

திரு. ஆர். கருப்பையா: தலைவர் அவர்களே. வெளியூர்களுக்குச் செல்லும் விரைவு வண்டிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற நேரம் கொஞ் சம் அதிகம் என்று கருதப்படுகிறது. உதாரணமாக திருச்சியிலிருந்து சென்னை வருவதற்கு 8 மணி நேரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே ½ மணி நேரம் அல்லது ஒரு மணி நேரம் குறைத்துக் கொடுக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்பொழுதே பஸ்கள் வேகமாக ஓடுகின்றன. அந்த நேரத்தை இன்னும் குறைத்துக் கொடுத்தால் அதி வேகமாக ஓட்டவேண்டியிருக்கும். அதனால் ஆபத்துகள் உண்டாகும்

1968 மார்ச் 6]

திரு. கு. கிருஷ்ணமூர்த்தி: பஸ்களில் வேகத்தைக் குறைப்பதற்கு மீட்டர் வைக்கும் உத்தேசம் சர்க்காருக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சட்டத்தை மீறி வேகமாக ஓட்டுவதைக் கண்டு பிடிப்பதற்கு ஒரு மீட்டர் இருக்கிறது. தனியார் துறை பஸ்களில் சிலர் அதை வைத்திருக்கிறார்கள். அதேபோன்று ஒரு மீட்டரை வைக்கலாமா என்று அரசு யோசித்துக் கொண்டு வருகிறது.

திரு. கே. விநாயகம்: ஸார், பெரும்பாலும் நமது பஸ்களில் விபத்து நடப்பதற்குக் காரணம் அவைகளை ஓட்டுநர்களும், நடத்துனர்களும் அதிருப்தி அடைந்திருப்பது தான். அந்த முக்கிய காரணத்தினால் தான் அவர்களால் தங்கள் வேலையிலே அதிக கவனம் செலுத்த முடிய வில்லை என்ற ஒரு கருத்து இருக்கிறது இப்பொழுது (குறுக்கிடு) இப்பொழுதோ, எப்பொழுதோ, அவர்களுக்குப் போதிய அளவுக்கு பாட்டா (டெய்லி அலவன்ஸ்) கொடுக்கப்படவில்லை. அப்படிக் கொடுக்கப் படவில்லையாதலால், அவர்கள் அதிகமாக வேலையில் அக்கறை காட்டுவதில்லை. இப்பொழுது வந்த அமைச்சர் அவர்கள் ஒரு மாநாடு கூட்டி அவர்களுக்கு 10 காசு தினந்தோறும் தருவதாகச் சொல்லியிருக்கிறார். அது எவ்வளவு கஞ்சத்தனம்? இதைவிட சற்று உயர்த்தித் தருவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இதையே கஞ்சத்தனம் என்றால், போன அரசு கொடுக்காமல் இருந்ததே, அது படு கஞ்சத்தனம் அல்லவா என்பதை உறுப்பினர் அவர்கள் உணர்வார்களா? (ஆளும் கட்சித் தரப்பில் ஆரவாரம்) அதிருப்தி காரணமாக விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் சொன்னார்கள். ஒரு புள்ளிவிபரம் தருகிறேன். 1967-ம் ஆண்டு மார்ச் மாதம் 6-ம் தேதியிலிருந்து 1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ம் தேதிவரை மூன்று மாத காலத்தில் நடந்த விபத்துக்களின் எண்ணிக்கை 184. புதிய அரசு பொறுப்பேற்ற பிறகு, அவர்கள் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள் என்று திரு. விநாயகம் அவர்கள் கூறிய காலக் கட்டத்தில் 1966-ம் ஆண்டு மார்ச் மாதம் 6-ம் தேதியிலிருந்து 1966-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ம் தேதி வரை, காங்கிரஸ் ஆட்சி காலத்தில், அவர்கள் திருப்தியாக இருந்த காலத்தில் 228 விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன.

திரு. ஜே. ஜேம்ஸ்: ஓவர்ஸ்பீடைக் கண்டுபிடிப்பதற்கு டிபார்ட்மெண்டில் ஏதாவது ஏற்பாடு இருக்கிறதா? அப்படியானால் கழிந்த ஓராண்டுக் காலத்தில் கண்டுபிடித்து பதிவு செய்த வழக்குகள் எத்தனை?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சர்க்கார் அலுவலகத்திலுள்ள டிராபிக் சூபரிண்டெண்டுகளும், மானேஜர்களும் ஜீப்பில் சென்று 'ஸர்பிரைஸ் செக்' என்ற அளவில் அவர்களை உடனடியாக சோதனையிட்டு நடவடிக்கை எடுப்பதற்கு சில விதிமுறைகள் இப்பொழுது செய்யப் பட்டு வருகின்றன. எத்தனை என்ற கணக்கு விவரம் இப்பொழுது இல்லை.

திரு. கே. போஜன்: தலைவர் அவர்களே, சர்க்கார் போக்குவரத்துகளில் ஓட்டுநர்களாக எடுத்துக் கொண்ட பிறகு, அவர்களை சாலை நடு வழியிலே அனுப்புவதற்கு முன்பு ஏதாவது பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறதா? ஆமெனில், எத்தனை மாதம் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஓட்டுநர்களுக்குப் பயிற்சி இதுவரையில் 48 நாட்களுக்கு மட்டும் பழைய அரசு காலத்தில் அளிக்கப்பட்டு வந்தது. ஏற்படுகிற விபத்துக்களைப் பார்த்து புதிய அரசு 48 நாட்கள் போதாது, என்று அதை மூன்று மாத காலப் பயிற்சியாக மாற்றி அமைத்திருக்கிறது. அதேபோல, 21 வயது உள்ளவர்கள் ஓட்டு

னர்களாக அமர்த்தப்படலாம் என்று பழைய அரசு விதித்திருந்தது. இப்பொழுது புதிய அரசு வந்த பிறகு 25 வயதுடையவர்கள்தான் ஓட்டுனர்களாக வரலாம் என்று விதிமுறைகள் திருத்தப்பட்டுள்ளன.

திரு. எம். எஸ். மணி : அமைச்சர் அவர்கள் பதில் கூறிய பொழுது பஸ் டிரைவர்கள் அதி வேகமாக ஓட்டுகிறார்கள் என்று புகார்கள் வந் திருப்பதாகக் குறிப்பிட்டார்கள். ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து இன்னொரு குறிப்பிட்ட இடத்திற்கு ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள்ளாகபபோக வேண்டும் என்ற ஒரு விதி இருக்கிற காரணத்தினால், குறைந்த வேகத்தில் போனால், நேரம் அதிகமாகிவிடும் என்ற காரணத்தினால்தான் இவ்வளவு வேக மாகப் போக வேண்டியிருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்படிப்பட்ட ஓட்டுநர்கள் தங்க ளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள நேரம் போதாது என்று புகார் செய்வார்களே யானால், அந்த ரூட்களைப் பரிசிலித்துப் பார்த்து, சர்வே செய்து, உரிய நேரம் மீண்டும் கணக்கிடப்படுவதற்குத் துறையினர் இப்பொழுது முயற்சித் துக் கொண்டிருக்கிறார்கள். அந்த முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக் கிறது.

திரு. கே. என். குமாரசாமி : துரித வண்டிகள் வேகமாகச் சென்ற தன் மூலம் இரண்டு பேர்கள் கோவையிலே செத்தார்கள் என்று திருமதி பழனியம்மாள் அவர்கள் கூறினார்கள். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது அரசாங்கத்திற்குத் தகவல் இல்லை என்று சொன் னார்கள். துரித வண்டிகளின் டிரைவர்களினால்தான் அப்படிப்பட்ட ஆக்ஸிடெண்ட் ஆகியிருக்கிறது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கீழ் அதிகாரிகள் கொண்டு வராமலே இருந்துவிட்டார்களா ? அப்படிப்பட்ட ஆக்ஸிடெண்டுகளை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வராமலேயே நிறுத்தி வைத்து விட்டார்களா என்பதைக் கூறுமாறு கேட்டுக்கொள்ளு கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கொண்டு வராமலேயே இருக்க முடியாது. இந்தத் தகவலை முன்பே அறிந்திருந்த திருமதி பழனி யம்மாள் அவர்கள் பொது மக்களுக்கு உபகாரமாக, சர்க்காருக்கு அதை முன்பே தெரிவித்திருக்கலாம். அவர்கள் அந்தத் தகவலை சட்டமன் றத்தில் தெரிவிப்பது பெருமை என்று கருதிவிட்டார்கள். பைல் வரும் பொழுது அரசாங்கத்திற்குத் தகவல் தெரியும். அதிகாரிகளால் இன்னும் தெரிவிக்கப்படவில்லை. அதிகாரிகள் அதை மறைத்துவிட மாட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தள்ளி வைக்கப்பட்ட 150-ம் எண் ணுள்ள வினா இப்பொழுது எடுத்துக் கொள்ளப்படும். திரு. வி. கே. கோதண்டராமன் அவர்களின் பெயரில் உள்ள வினாவை திரு. செ. பால சுப்பிரமணியன் அவர்கள் கேட்கிறார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 150, 151 எண்களுள்ள இரண்டு வினாக்களையும் சேர்த்து எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரண்டு வினாக்களுக்கும் பதில் அளிக்கிறார்கள்.

மின் உற்பத்தி.

***150 வினா—திரு வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் தொழில், விவசாயம் இவைகள் அபி விருத்தி செய்ய வேண்டி மேலும் மின்சாரம் உற்பத்தி செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?